செய்தி வெளியீடு எண் :1026 நாள்: 23.06.2022

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

**காமன்வெல்த் போட்டியில் பங்கேற்கும் தமிழக விளையாட்டு வீரர்கள் 7 பேருக்கு மாண்புமிகு சுற்றுச்சூழல் , காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் வாழ்த்து**

....

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சர்வதேச அளவில் விளையாட்டுத் துறையில் தமிழகம் சிறந்து விளங்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் தலைமையிலான அரசு, விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கின்ற வகையில், செஸ் ஒலிம்பியாட்-2022 போட்டியினை நடத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்கள்.

இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரில் நடைபெற உள்ள காமன்வெல்த் போட்டியில் பங்கேற்கும் தமிழக ***தடகள வீரர்கள் 5 நபர்கள் மற்றும் மேசைப்பந்து வீரர்கள் இருவருக்கு*** மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் வாழ்த்து கூறியுள்ளார்.

இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரில் ஜூலை 28 முதல் ஆகஸ்டு 8 வரை காமன்வெல்த் -2022 போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் 37 தடகள வீரர்கள் பங்கேற்க உள்ளனர். இவர்களில் 7 தமிழக வீரர்களும் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

பெண்கள் பிரிவில் 100 மீட்டர் மற்றும் 4 X 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் பங்கேற்கும் தனலட்சுமி, ஆண்கள் பிரிவில் மும்முறை தாண்டும் போட்டியில் பிரவீன் சித்திரைவேல், 4 X 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் ஆரோக்கிய ராஜீவ், நாகநாதன் பாண்டி மற்றும் ராஜேஷ் ரமேஷ் ஆகியோர் பங்கேற்க உள்ளனர். மேலும், மேசைப்பந்து போட்டியில்

செல்வன் சரத்கமல் மற்றும் சத்யன் ஞானசேகரன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

இதில் பிரவீன் சித்திரைவேல் Mission International Medal Scheme உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு ஆண்டொன்றுக்கு ரூ.10.00 இலட்சம் தமிழக அரசு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. ஆரோக்கிய ராஜீவ், சரத்கமல் மற்றும் சத்யன் ஞானசேகரன் ஆகியோர் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் (Elite Scheme) சேர்க்கப்பட்டு ஆண்டொன்றுக்கு ரூ.25.00 இலட்சம் தமிழக அரசு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரில் நடைபெறும் காமன்வெல்த் போட்டிகளில் தமிழக வீரர்கள் தங்கள் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி பதக்கங்களை வென்று, இந்தியாவுக்கும் தமிழகத்துக்கும் பெருமை சேர்ப்பார்கள் என தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

*************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in